FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301672

1. District : Salem மாவட்டம் | PS: VSAC, Salem காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 13/AC/2026 முத.அ. எண் | Date: 28.08.2026 நாள்

2. (i) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106
   (ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amented in 2018 | Sections பிரிவுகள்: 12 r/w 7 (a)
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : 27.08.2026 நாள் முதல் | Date to : 15.00 hrs before. நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from : 28.08.2026 நேரம் முதல் | Time to : 11.00 hrs நேரம் வரை
   (b) Information Received at PS. Date : Volume-III 28.08.2026 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் | Time : 11.00 hrs. நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் – 2 Kms South
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Office of the Municipal Corporation, Salem city.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : V. Ganesan குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் | (b) Father's/ Husband's Name : T. K. Venkataehalam தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 14.06.1986 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : Indian நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Special Tahsildar (Arbitration, Salem) தொழில் | (g) Address : Collectorate, Salem முகவரி (Salem, Namakkal, Dharmapuri & Krishnagiri)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. P. Madhaiyan S/o. Ponnusamy, Pandarathan Kattuvalavu, Mallikuttai, Omalur Taluk, Salem District and Unnamed officials of Salem Municipal Corporations, Salem city.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets are enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு ஏல்லையைக் 'கருதி' புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.08.2026

Name: பெயர் S. Murugan
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Salem.

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/AC/2026 u/s 106 BNSS and 12 r/w Sec 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018ன் கீழ் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12ன் விபரம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

இன்று 28.08.2026 ஆம் தேதி பகல் 11.00 மணிக்கு சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொ), திரு.V.கணேசன் என்பவர் சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பினவருமாறு: அனுப்புநர் V.கணேசன், தனி வட்டாட்சியர், இசைவு தீர்ப்பாயம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், துணை ஆய்வுக்குழு அலுவலர்(பொ), சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சேலம், பெறுதல் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சேலம், ஐயா, சேலம் மாநகரம் கோட்டை பகுதியில் செயல்பட்டுவரும் சேலம் மகநகராட்சி மைய அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு, பொது நிர்வாகப்பிரிவு மற்றும் கணக்கு பிரிவு ஆகியவற்றில் ஒப்பந்த பணிகளுக்கான பட்டியல் தொகையை விடுவிக்கக்கோரும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் இதர பணிகளுக்காக வரும் பொதுமக்களிடமிருந்தும் முறையற்ற வகையில் கையூட்டு பெறுவதாக இன்று 27.08.2026-ம் தேதி பகல் சுமார் 14.30 மணிக்கு கிடைத்த நம்பகமான தகவலின்பேரில் 27.08.2026ம் தேதி பகல் 15.15 மணி முதல் மாலை 22.00 மணி வரை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களும் இணைந்து சேலம் மாநகராட்சி மைய அலுவலகத்தில் தரைதளத்தில் செயல்பட்டுவரும் கணக்கு பிரிவு, முதல் தளத்தில் செயல்பட்டுவரும் பொது நிர்வாகப் பிரிவு, பொது சுகாதாரப்பிரிவு மற்றும் வருவாய் பிரிவு மற்றும் இரண்டாம் தளத்தில் செயல்பட்டுவரும் பொறியியல் பிரிவுகளில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின்போது மேற்படி அலுவலக முதல்தளத்தில் உள்ள கணக்கு பிரிவில் இருந்த திரு.P.மாதையன் த/பெ. பொன்னுசாமி, பண்டாரத்தான் காட்டுவளவு, மல்லிக்குட்டை, ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் அந்த அலுவலகத்திலிருந்த அலுவலக உதவியாளர் அமரும் மேசையிக் மீதிருந்த அளவு புத்தகத்திற்குள் மறைத்துவைத்திருந்த பணம் ரூபாய்

ரூ.20,000/- மற்றும் திரு.P.மாதையன் அவர்கள் வைத்திருந்த அவருடைய Sri Vaideeswara & Co நிறுவனத்தின் Letter pad-ல் 08.07.22026ம் தேதியிட்டு EMD தொகையை திரும்ப கேட்டு மாநகராட்சி ஆணையருக்கு வழங்கவிருந்த கடிதம், மேற்படி அலுவலகத்தின் இரண்டாம் தளத்தில் செயல்படும் பொறியியல் பிரிவில் அந்த ஹாலின் நுழைவு வாயிலுக்கு அருகில் வடக்கு பக்க சுவற்றை ஒட்டி மேற்கு பக்கம் ஒன்றன்மீது ஒன்றாக இரண்டு வரிசைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த இரண்டாவது அட்டை பெட்டியில் வாகனங்கள் சம்மந்தப்பட்ட பழைய ஆவணங்களுக்கிடையில் காக்கி நிற கவரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரூபாய் 50,000/- மற்றும் அந்த ஹாலில் இருந்த திரு.P.மனோகரன் த/பெ பொன்னுசாமி, மேற்பார்வையாளர், நடேசன் என்ஜினியரிங் காண்ட்ராக்டர்ஸ், மேட்டூர், குடியிருப்பு-தூக்கணாம்பட்டி கிராமம், மேட்டூர் டேம், சேலம் மாவட்டம் என்பவரிடமிருந்து இரண்டு வெள்ளை நிற துண்டு சீட்டுகளில் பொறியாளர்களுக்கு கமிஷன் கொடுக்கும் விவரத்தை குறிப்பிட்டு எழுதப்பட்டிருந்தவை, ஆக மொத்தம் ரூ.70,000/-ற்கு சம்மந்தப்பட்ட நபர்களால் சரியான முகாந்திரம் தெரிவிக்காத காரணத்தால் மேற்படி தொகை அந்த அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் எவருக்கேனும் இலஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டுவந்திருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதற்கு போதுமான முகாந்திரம் உள்ளது. இத்துடன், திடீர் தணிக்கையின்போது கைப்பற்றப்பட்ட தொகை ரூ.70,000/-ம், மகஜரையும் இத்துடன் கைப்பற்றப்பட்ட ஆவணங்களையும் இணைத்துள்ளேன். எனவே, மேற்படி தொகைக்கு பொறுப்பான திரு.P.மாதையன் த/பெ. பொன்னுசாமி, பண்டாரத்தான் காட்டுவளவு, மல்லிக்குட்டை, ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் என்பவர்மீதும் மற்றும் இந்த குற்றச்செயலுக்கு சம்மந்தப்பட்ட அலுவலர்களையும் கண்டறிந்து, அவர்கள்மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxx 28.08.2026 (V.Ganesan).

Sir, Received the complaint at 11.00 hrs today on 28.08.2026 and registered a case in Salem Vigilance & Anti-Corruption Cr.No.13/AC/2026 u/s 106 BNSS and Sec 12 r/w 7 (a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 on 28.08.2026 at 12.30 hrs. Sd xxxx 28.08.2026 (S.Murugan), Inspector of Police, V&AC, Salem.

Original FIR along with original computer typed complaint of Tr.V.Ganesan, Tahsildar, Deputy Inspection Cell Officer(i/c), Salem, Dharmapuri, Namakkal and Krishnagiri Districts is submitted to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Salem and other copies were submitted to the officers concerned.

28/08/2026

(S.Murugan),
Inspector of Police
V&AC, Salem.



